செ.வெ.எண் : 19/ ஜூன் நாள் : 17.06.2021

## இராமநாதபுரம் மாவட்டம்

## மாவட்டத்தின் புதிய ஆட்சித் தலைவராக முனைவர்.ஜெ.யு.சந்திரகலா,இ.ஆ.ப., அவர்கள் பொறுப்பேற்பு

இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் இன்று (17.06.2021) முனைவர்.ஜெ.யு.சந்திரகலா,இ.ஆ.ப., அவர்கள் மாவட்ட ஆட்சித் தலைவராக பொறுப்பேற்றுக் கொண்டார்கள்.

தொடர்ந்து மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

இராமநாதபுரம் மாவட்டத்தின் ஆட்சித் தலைவராக பொறுப்பை ஏற்பதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் புதிதாக பொறுப்பேற்கும் மாவட்ட ஆட்சித் தலைவர்களுடன் ஆலோசனைக் கூட்டம் நடத்தி பல்வேறு அறிவுரைகளை வழங்கியுள்ளார்கள். அதன்படி, மக்கள் நலத்திட்டங்கள் அனைத்தும் பொது மக்களுக்கு முழுமையாகச் சென்றடையும் வகையில் பணிகள் செயல்படுத்தப்படும்.

குறிப்பாக, கொரோனா தடுப்பு நடவடிக்கைகள், குடிநீர் விநியோகம், பொது சுகாதாரம், மகளிர் நலன் சார்ந்த திட்டங்கள் போன்ற பணிகளுக்கு முக்கியத்துவம் வழங்கப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்படும். மாவட்டத்தில் பெரும்பான்மையான மக்கள் விவசாயத்தை முக்கிய தொழிலாகவும், அதற்கடுத்தபடியாக மீன்பிடித்தொழில் முக்கிய தொழிலாகவும் இருந்து வருகிறது. விவசாயிகள் மற்றும் மீனவர்கள் நலன் சார்ந்த திட்டங்களுக்கும் முக்கியத்துவம் வழங்கப்படும். மாவட்டத்தில் குடிநீர் விநியோகத்தை பொருத்தவரையில், காவிரி கூட்டு குடிநீர் திட்டம் மிக முக்கிய பங்கு வகிக்கின்றது. மேலும், சாயல்குடி அருகே உள்ள நரிப்பையூர் மற்றும் குதிரைமொழி ஆகிய பகுதிகளில் கடல்நீரை நன்னீராக்கும் நிலையம் அமைத்தல் போன்ற திட்டங்கள் செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளன. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உத்தரவின்படி இத்திட்டப்பணிகளில் கூடுதல் கவனம் செலுத்தப்பட்டு பொதுமக்களுக்கு சீரான குடிநீர் வினியோகம் வழங்கிட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

அனைத்துத் அரசுத் துறை அலுவலர்களையும் ஒறுங்கிணைத்து, மக்கள் நலத் திட்டங்கள் அனைத்தும் முழுமையாக செயல்படுத்தி மாவட்டத்தின் வளர்ச்சிக்கு நாம் அனைவரும் ஒருங்கிணைந்து பணியாற்றுவோம் என மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தெரிவித்தார்கள்.

தொடர்ந்து, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.இ.கார்த்திக்,இ.கா.ப., மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.ஆ.சிவகாமி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) திரு.ஆர்.பழனிகுமார், வருவாய் கோட்டாட்சியர்கள் திரு.து.தங்கவேல் (பரமக்குடி), திரு.சி.ரவிச்சந்திரன் (இராமநாதபுரம்), மகளிர் திட்ட இயக்குநர் திரு.தெய்வேந்திரன், செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் திரு.எஸ்.ஜெகவீரபாண்டியன், உட்பட அனைத்துத் துறை சார்ந்த அலுவலர்கள் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கு வாழ்த்து தெரிவித்தனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்.**